**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 8016/E/2018**

திரு பழனிச்சாமி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மருங்காபுரி வட்டம்,
திருச்சி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 03.10.2017 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 04.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 26.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு பழனிச்சாமி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு க.சண்முகம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 03.10.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் உண்மையான வாரிசுதாரர்களை பட்டாதாரர்களாக நியமனம் செய்யக்கோரி மற்றும் பட்டா மாற்றம் செய்து தரக்கோரி

பெறப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை விபரம், அதில் மேல்முறையீட்டாளர் அனுப்பிய மனுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம், மேல்முறையீட்டாளர் கொடுத்த மனுவின் வரிசை எண், வரப்பெற்ற மொத்த மனுக்களில் இதுவரை பட்டா மாற்றம் வாரிசுதாரர்கள் விசாரணை செய்து வழங்கப்பட்ட மனுவின் விபரம், மேல்முறையீட்டாளர் கொடுத்த மனுவிற்குப்பின் வரப்பெற்ற மனுக்களில் பட்டா மாற்றம் வழங்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மற்றும் வரிசை எண் விபரம், பட்டா மாறுதல் கோரி மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த மனுவில் எல்லா ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்ற விபரம், ஏதேனும் ஆவணம் விடுப்பட்டிருந்தால் அதுகுறித்து மேல்முறையீட்டாளருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது எனில் அத்தகவல் கடிதத்தின் நகல், எல்லா ஆவணங்களும் சரியாக உள்ள நிலையில் மேல்முறையீட்டாளரின் மனுவின் மீது நடவடிக்கை எடுக்க தவறிய அலுவலரின் பெயர், பதவி விபரம், எந்த தேதிக்குள் மேல்முறையீட்டாளருக்கு பட்டா மாறுதல் வழங்கப்படும் என்ற விபரம், குறிப்பிட்ட தேதிக்குள் பட்டா மாறுதல் வழங்கப்படாவிட்டால் நான் மேல்முறையீடு செய்ய வேண்டிய உயர் அலுவலரின் பெயர், பதவி, அலுவலக முகவரி விபரம் என 9 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வண்ணாங்கோவில், திருச்சி - திண்டுக்கல் சாலை, நவலூர் குட்டப்பட்டு அஞ்சல், திருச்சிராப்பள்ளி மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 06.10.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மருங்காபுரி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளருக்கு 14.11.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 04.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 26.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 14.11.2017, 23.10.2018 மற்றும் 24.09.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், இன்றைய தேதியில் அதன் நகலை மேல்முறையீட்டாளருக்கு வழங்கத் தயாராகக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்து, இன்றைய விசாரணையின்போது மேல்முறையீட்டாளருக்கு நேரில் சார்வு செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலை பரிசீலனை செய்கையில் இனம் 7 மற்றும் 9 - ற்கான தகவல் வழங்கப்பட்டுள்ளதும், ஏனைய இனங்களுக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்பதும் தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 03.10.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலில் இனம் 7 மற்றும் 9 தவிர ஏனைய இனங்களுக்குரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 8016/E/2018</u>**

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மருங்காபுரி வட்டம்,
திருச்சி மாவட்டம்.

<u>மனுதாரர்</u>

திரு பழனிச்சாமி,
த/பெ. (லேட்) குமரன்,
குறிஞ்சி நகர்,
வளநாடு (அஞ்சல்)
மருங்காபுரி வட்டம்,
திருச்சி மாவட்டம்.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*